REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தென் மண்டல மாநிலங்களில் விற்பனை வரி

மதுரை, ஆக. 11—

"சென்னை, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய நான்கு தென் மண்டல மாநிலங்களிலும் விற்பனை வரி ஒரே முறையாக இருத்தல் வேண்டும் என்று சிபாரிசு செய்ய உத்தேசித்திருக்கிறேன்"

என மதுரையில், தமிழ் நாடு உணவுப் பொருள் வர்த்தகர் சங்கத்தில் பேசுகையில், விற்பனை வரி விசாரணை அதிகாரியான டாக்டர் பி. எஸ். லோகநாதன் தெரிவித்திருக்கிறார்.

"இது எல்லோர மாநிலங்களில் வரி விதிப்புகளில் உள்ள வேறுபாடுகளையும், அதை ஒட்டிய இதர தீங்குகளையும் போக்க உதவும் என்று கருதுகிறேன்" எனவும் அவர் கூறியிருக்கிறார்.

மலர் 5] சென்னை: ஆடி 28உ திங்கள் (12—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 29உ செவ்வாய் (13—8—57) [இதழ் 50

வெற்றி வேந்தர்கள் வாழ்ந்த நாட்டில் டால்மியாக்களின் ஆதிக்கமா?

இந்த நாட்டவர் வெளிநாடுகளில் கூலிகளாவதும் வடநாட்டவர் இங்கே கொட்டமடிக்கும் நிலையும் ஏன்?

திராவிடத்தை மீட்க நெடுஞ்செழியன் அன்பழைப்பு

"வடநாட்டுடன் நாம் இணைந்திருப்பதால் நமக்குக் கிடைக்கும் இலாபம் என்ன? நாம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்கிற வரி எவ்வளவோ, அந்தத் தொகை முழுவதும் இந்த நாட்டுக்குச் செலவழிக்கப்படுகிறதா ?இல்லையே! அவர்கள் அதிகமாகச் செலவழிக்க வேண்டாம்; நாம் கொடுக்கிற பணத்தையாவது முழுவதும் நமக்குச் செலவழிக்கிறார்களா?

"நாம் கொடுக்கும் சுங்க வரி அங்கே—சுரங்க வரி அங்கே! காப்பி வரி அங்கே—தேயிலை வரி அங்கே! தீப்பெட்டி வரி அங்கே! வருமான வரி அங்கே! இரயில் கட்டணம் அங்கே! தபால் கட்டணம் அங்கே! மிளகு வரி அங்கே—ஏலக்காய் வரி அங்கே! எல்லா வரிகளும் அங்கே—டெல்லியிலே சென்று குவிகின்றன.

"இங்கே ஏதோ, கீழ்பவானி அணைக்கட்டை ரூ. 1½-கோடியில் கட்டுவதாகக் கூறுகிறார்கள். வடநாட்டிலோ பல கோடி ரூபாயில் பக்ரா-நங்கலும், இராகுட் அணையும், இன்னும் ஏராளமான திட்டங்களும் நிறைவேற்றுகிறார்கள்.

"வடக்கே ரூ. 55 கோடி செலவில் சித்தரஞ்சன் தொழிற்சாலை! இங்கே பெரம்பூரில் ரூ 8-கோடியில் இரயில் பெட்டித் தொழிற்சாலை!

"வடநாட்டு எஞ்சின் இழுக்கும் பக்கமெல்லாம் தென்னாட்டில் செய்யும் பெட்டிகள் போகவேண்டும்!

"எஞ்சின் வழி எப்படியோ அப்படியே பெட்டி வழி! நேரு வழி எப்படியோ, அவ்வழி நம் காமராசர்!

"சிந்திரியிலே ரூ. 15 கோடி செலவில் உரத் தொழிற்சாலை; இங்கே ரூ. 1¾-இலட்சம் செலவில் அப்பளத் தொழிற்சாலை! இதைத்தான் நாம் காண்கிறோம்"

—இவ்வாறு, சென்னை-பெரம்பூரை அடுத்த மடுமா நகரில் நடைபெற்ற கலைவளர்ச்சி மன்ற ஆண்டுவிழாப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டு விட்டு மேலும் பேசியதாவது :—

"தி. மு. கழகத்தாருக்கு அழகாகப் பேசத்தானே தெரியும்? அவர்கள் சட்டசபைக்குப்போய் என்ன செய்யமுடியும்?—என்கிறார்கள்; சட்டசபைக்கு வேறு என்ன தேவை? உள்ளத்தில் உள்ளதை சபையிலே எடுத்து வைக்கும் ஆற்றல்வேண்டும்; அது தானே சட்டசபைக்குத் தேவை? அந்த ஆற்றல் எங்களிடம் இருக்கிறது ;போதாதா?அப்படியில்லாமல், தேநீர் விருந்திலே கலந்து கொள்ள மட்டும்தான் தகுதி வேண்டுமா? நாட்டுக்குத் தேவையானவற்றை வாதித்து வற்புறுத்த ஆற்றல் வேண்டாமா?

"இதற்குமுன் இருந்த சட்டசபையைத்தான் நாம் பார்த்திருக்கிறோமே!—அப்பொழுதெல்லாம் சட்டமன்றத்திலே இவ்வளவு சுறுசுறுப்பு-பரபரப்பு இருந்ததா?

"அறிஞர்கள் கூடி முடிவெடுக்கும் இடம்தான் சட்டசபை என்பது! எனவே, அறிஞர்கள் இப்பொழுது சட்டசபைக்குச் சென்றிருக்கிறார்கள்; சட்டசபையும் எடுப்பாக இருக்கிறது.

"மேடையிலே பேசத் தெரியாதவன் எப்படி சட்டமன்றத்திலே தொடை நடுங்காமல் பேசுவான்?

"இப்பொழுது இருக்கும் 8 மந்திரிகளிலே எத்தனைபேர் மேடையிலே அழகாக—திறமையாகப் பேசக்கூடியவர்கள்? சுப்பிரமணியம்தான் மேடையிலே பேசுவதில் கொஞ்சம் திறமையுள்ளவர்; அதனுல்தான் சட்டசபையிலும் அவரால் சமாளிக்கமுடிகிறது. மற்ற மந்திரிகளுக்கு 'தடுக்குமொழி' தானே வருகிறது. மந்திரி இராமய்யாவால் அப்படிப் பேசமுடியுமா? மந்திரி கக்கனுல் அப்படிப் பேசமுடியுமா?

"தி. மு. கழக உறுப்பினர்கள் 15 பேரும் பேசினுல் சர்க்கார் அலுவலக ஊழியர்களெல்லாம் திரண்டுவந்து நின்று

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ்நாட்டில் கைத்தறி அபிவிருத்தி

தமிழ் நாட்டில் புதிதாக 10 சாயத் தொழிற்சாலைகள் நிறுவப்படும்.

அத்துடன், மாதிரி நெசவுத் தொழிற்சாலைகளில் சுமார் 100 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

கைத்தறி அபிவிருத்திக்காகச் செய்யப்படும் இந்தக் காரியங்களுக்கு டெல்லி சர்க்கார், கடனுகவும் மானியமாகவும் பண உதவி செய்வார்கள் என்று தெரியவருகிறது.

தமிழ் நாட்டில் கைத்தறிகளைப் பிரபலப்படுத்த மேலும் சுமார் 10 கைத்தறி விற்பனை நிலையங்களைத் துவங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

23 ஆயிரம் ஸ்டேஷன்மாஸ்டர்கள் வேலை நிறுத்தம்!

செப்டம்பர் 15 முதல் துவங்குமென அறிவிப்பு

பம்பாய், ஆக. 11—

தங்களின் கோரிக்கைகளை ஈடேற்றுவிட்டால், இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர்களும், உதவியாளர்களும் செப்டம்பர் 15-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று ஊழியர் சங்கத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

சம்பள விகிதங்களைத் திருத்தி அமைத்தல், சங்கத்தை அங்கீகரித்தல், எல்லா மட்டங்களிலும் பேச்சுவார்த்தைகளுக்கு வாய்ப்பளித்தல் முதலியன அவர்களின் கோரிக்கைகளில் பிரதானமானவை.

மேற்கு பிராந்தியத்தில் உள்ள 27,000 பேர்களில் 23,000பேர் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு மந்திரியின் அனுபவம் பேசுகிறது:

'அரசியல்சட்டம் ராஜ்ய அதிகாரத்தை கட்டுப்படுத்துகிறது'

'ராஜ்யங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்'

'அப்பொழுதுதான் கணிசமான முன்னேற்றம் காணமுடியும்'

'அதற்காக அரசியல் சட்டத்தை திருத்த வேண்டும்'

கண்ணனூர், ஆக. 10—

"ராஜ்யங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்கும் முறையில் அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்; அப்பொழுதுதான் ராஜ்யங்களில் தொழில், விவசாயம் முதலிய பல்வேறு துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்படுவது சாத்தியமாகும் என்று நேற்று முன்தினம் நகர மண்டபத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளிக்கையில், கேரள நிதியமைச்சர் சி. அச்சுத மேனன் கூறினார்.

"...கேரளம் பூரண அரசுரிமை அதிகாரமுள்ள ராஜ்யமல்ல; கடந்த மூன்று நான்கு மாதகாலத்திய அனுபவத்திலிருந்து அரசியல் சட்டம் ராஜ்ய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறது என்பதைக் கண்டு கூற முடியும் என்றார்.

"...இரண்டாவது திட்டத்தில் தொழில் அபிவிருத்திக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தும் மொத்தம் 87 கோடி ரூபாயில் கேரளத்தில் தொழில் வளர்ச்சிக்கு 8 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றுகுறிப்பிட்ட அவர், தொழிலபிவிருத்திக்கு மத்திய சர்க்கார் அதிகப் பணம் ஒதுக்கவேண்டும் என்று வலியுறுத்தினர்."

—மேற்கண்டவை, 'ஜனசக்தி' சென்னை 11-8-57-ந் தேதிய இதழில், ஐந்து கலம் தலைப்பிட்டுத் தரப்பட்டிருக்கும் செய்தியின் பகுதிகளாகும்.

'டெல்லியுடன் கூடிக்கொண்டு மாநில சர்க்கார் மக்களை ஏமாற்றுகிறது'

'தொழிற்சாலைக்காக ஆக. 14 முதல் போராட்டம் துவக்கப்படும்'

அசாம் போராட்டக் குழுத் தலைவர் பேசுகிறார்

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை அசாமிலேயே நிறுவவேண்டும் என்பதற்காக மாநிலம் எங்கும் வரும் ஆகஸ்டு 14-ந் தேதி முதல் இடைவிடாத கிளர்ச்சி நடத்தப்படும்.

இந்தத் தகவலை, போராட்டக் குழுத் தலைவரான ஹரேஷ்வர் கோஸ்வாமி தெரிவித்திருக்கிறார்.

"தேவைப்பட்டால், சந்தர்ப்பம் நேர்ந்தால் போராட்டம் மாநில சர்க்காருக்கு எதிராகவும் நடைபெறும்" என்றும் அவர் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

டெல்லியின் இப்போதைய ஏற்பாடு—அதாவது, அசாமில் தொழிற்சாலை நிறுவுவது பற்றியும் திட்ட அறிக்கை கோரப்பட்டிருக்கிறது என்ற அறிவிப்பு—அசாம் மக்களை ஏமாற்றும் கேலிக்கூத்து என்றும், மக்கள் இதில் மயங்கி ஏமாந்துவிடக் கூடாது என்றும், டெல்லியுடன் சேர்ந்துகொண்டு அசாம் காங்கிரசும், மாநில சர்க்காரும் மக்களை ஏமாற்ற நினைக்கின்றனர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சர்வதேச நிறுவன குழந்தைகள் நிதி

இந்தியா ரூ. 16 இலட்சம் வழங்கும்

பாங்காக், ஆக. 10—

சர்வதேச நிறுவன குழந்தைகள் நிதிக்கு ஏழு ஆசிய நாடுகள் சுமார் 6 இலட்சம் அமெரிக்க டாலர்வரை தர வாக்களித்துள்ளன; இந்தியா இதற்கு 3,36,000 டாலரும் (ரூ, 16 இலட்சம்) பாகிஸ்தான் 75,000 டாலரும் தரச் சம்மதித்திருக்கின்றன.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—8—57 திங்கள்

எப்படி நடந்துகொள்ளுமோ?

தனது ஊழியர்கள், தங்களுடைய வாழ்க்கையை வளமுள்ளதாக அமைத்துக் கொள்ளுவதற்கான உதவியை, அவ்வப்பொழுது செய்து தரவேண்டிய பொறுப்பும் கடமையும், அவர்களுடைய பணியிலிருந்து பயனடைந்து வருகின்றவர்களுக்கு என்றும் உண்டு. இப்பொறுப்பும் கடமையும், அரசுக்கும் தனி நபர்களுக்கும் பொதுவானதாகும்.

இப்பொறுப்பும் கடமையும் எந்த அளவு நல்லெண்ணத்துடன் காலாகாலத்தில் நிறைவேற்றி வைக்கப்படுகின்றதோ, அதற்கேற்ற வகையில்தான் பணிபுரிவதில் ஊழியர்களுக்குள்ள ஆர்வமும் பற்றும் அமைந்திருக்கமுடியும். தனக்குள்ள பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றி வைப்பதில் காலதாமதமோ அலட்சியமோ காட்ட, அரசோ அல்லது தனி நபர்களோ முன் வரும்பட்சத்தில், அது கண்டு தொடர்புடைய ஊழியர்கள் அதிருப்தி கொள்வதுடன், ஆத்திரம் கொண்டவர்களாய், தங்களைப் பணிக்கு அமர்த்திக் கொண்டவர்களுக்கு எதிராக போர் முரசு அறைவதும் எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

ஊழியர்களுக்கு நல்வாழ்வை அளித்துத் தீரவேண்டியது, அவர்கள் பணியை யேற்றுக் கொள்ளுகின்றவர்களுக் குரிய பொறுப்பும் கடமையுமாகும் என்ற உயர் உண்மையை அடிப்படையாகக்கொண்டுதான் பலவிதமான தொழிற் சட்டங்களை, இந்தக் காலத்தில் எந்த அரசும் செய்து வருகிறது. அதைப் பின்பற்றித்தான், இந்தியப் பேரரசும் பற்பல தொழிற் சட்டங்களை இங்கும் இயற்றி வருகிறது.

தொழிலாளர் நலங் கருதி பல வகை தொழிற் சட்டங்களை இயற்றிவரும் அதே நேரத்தில், அந்தச் சட்டங்களுக்கு மதிப்பளித்து நடந்துகொள்ளும் தனி நபர்களைப் போன்றே, தானும் நடந்துகொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தை இந்தியப் பேரரசும் பெற்றிருக்க வேண்டும். அத்தகு போக்கைத் தான் இந்தியப் பேரரசிடம் எவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் இந்தியப் பேரரசோ, தம்மால் இயற்றப்படும் தொழிற் சட்டங்களுக்கெல்லாம் தனி நபர்கள்தான் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்; அந்தக் கட்டுப்பாடு தனக்குக் கிடையாது என்ற ரீதியில் செயலாற்றி வருகின்றது. இது வருந்தத்தக்கது.

அஞ்சல்-தந்தி ஊழியர்களும், மத்திய அரசாங்க ஊழியர்களில் ஒரு சாராரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்தனர். அவர்கள், தாமாக அந்த எல்லைக்குள் சென்றுவிடவில்லை. அவர்களை, அந்த எல்லைக்குத் துரத்திபடித்தது இந்தியப் பேரரசே யாகும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அவர்களுடைய கோரிக்கையை, அவ்வப்பொழுது கோரிக்கை எழுந்தபொழுதே, கோரிக்கையின் குறைந்தபட்ச அளவையாவது நிறைவேற்றி வைக்க இந்தியப் பேரரசு முன் வந்திருக்க வேண்டும். அப்படி வந்திருக்குமானால், வேலைநிறுத்தத் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டிய கட்டாயமே மேற்படி ஊழியர்களுக்கு ஏற்பட்டு இருக்காது. ஊழியர்களிடை மனக்கசப்பும் வளர்ந்திருக்காது. இந்தியப் பேரரசிற்கும், அதன் ஊழியர்களுக்கும் இருந்துவந்த நல்லுறவும் தற்காலிகமாகவாவது நலியத் தொடங்கி இருக்காது.

அவர்கள் கோரிக்கைகள் நியாயமானவை என்பதை இந்தியப் பிரதமரே ஒப்புக்கொண்டும் உள்ளார். தம்மாலேயே நியாயமானவை என ஒப்புக்கொண்டுள்ள கோரிக்கைகளுக்கு இணங்க ஒருவர் மறுப்பது என்றால், எந்த அரசுக்கும் இயல்பாக இருந்து வரும் வரட்டுப் பிடிவாதத்துடன்தான், இதையும் சேர்த்து எண்ணவேண்டும்.

இந்தியப் பேரரசை கவிழ்த்துவிட வேண்டும் என்ற கெடுமதியுடனே அல்லது நிலைகுலையச் செய்துவிடவேண்டும் என்ற தீயக் கருத்துடனோ, மேற்படி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் துணியவில்லை. தங்களுடைய அரை வயிறு கால்வயிறு பட்டினி நிலையைப் போக்கிக் கொள்ளுவதற்குத் தான் ஊழியர்கள் முன்வந்தனர்.

இப்பேருண்மையை தாமே உணர்ந்திருந்தும்கூட, ஊழியர்களின் வேலைநிறுத்த முடிவை தேசத் துரோகமானது—சமூக விரோதமானது என்றெல்லாம் அவர் நிந்தித்தார். ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்குக் காலப்போக்கில் அமைந்துவிடக்கூடிய மனப்போக்கு என்றுதான் இதைக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது சம்பள நிர்ணயக் குழுவும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியினை விரைவில் முடிக்கவேண்டும். அதன் முடிவையும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர இந்தியப் பேரரசும் திருவுளம் கொள்ளவேண்டும்.

அதுவுமன்றி, மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும் மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பளவிகிதத்தில் பெரிய வேற்றுமை இன்று இருந்துவருகிறது. இது அநீதி. இதை மாற்றி அமைக்கவேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்கனவே இருந்துவருகிறது. இந்த வேற்றுமையைக் களைந்து, ஓர் வழி காணும் பொறுப்பையும் இரண்டாவது சம்பள நிர்ணயக் குழுவிடம் ஒப்படைக்க இந்தியப் பேரரசு தீர்மானிக்க வேண்டும். இதற்கான கோரிக்கையையும் தொடர்புடையவர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

இதை எல்லாம் நல்லெண்ணத்துடன் செய்ய இந்தியப் பேரரசு முன்வந்தால்தான், அரசாங்க ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் கண்டிப்பாக இருந்து தீரவேண்டிய நல்லுறவு வளம்படுவதும் பலம் பெறுவதும் எதிர்பார்க்கமுடியும். இந்தியப் பேரரசு எப்படி நடந்து கொள்ளுமோ?

தண்டகாரண்ய திட்டம்

நிறைவேற்றிவைக்க சுயேச்சையான நிறுவனம்

புதுடில்லி, ஆக. 9—

அகதிகளுக்கு சுகவாழ்வு தருவதற்கான தண்டகாரண்யத் திட்டத்தை நிறைவேற்றிவைக்க சுயேச்சையான ஒரு நிறுவனம் காண்பதென டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

ஆந்திரா — ஒரிசா —மத்தியப் பிரதேச மாநிலங்களின் பகுதிகளை அடக்கிய சுமார் 80 ஆயிரம் சதுர மைல் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாம் இந்தத் திட்டம்!

கடன் கேட்கும் படலம் ஆரம்பமாகிறது

சென்னை, ஆக. 10—

நடைமுறை ஆண்டில் முதலீட்டுச் செலவுகளை ஈடுகட்டுவதற்குத் தேவையான தொகையை, மாநிலம் முழுவதும் சிறு சேமிப்பு மூலம் வசூலிப்பதற்கு சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

நடைமுறை ஆண்டில் முதலீடு தொகையாக ரூ. 20 கோடி தேவைப்படுகிறதாம். சிறு சேமிப்பு மூலம் ரூ. 6 கோடி திரட்ட சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று தெரிய வருகிறது.

10,000 செக்குகளுக்கு உதவித் தொகையாம்!

சென்னை, ஆக. 10—

பழைய ஆலைகளுக்குப் பதில் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு புதிய நாட்டுச் செக்குக்கும் ரூ. 150 உதவி மானியம் அளித்துவர இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்.

ஆண்டுதோறும் 10,000 நாட்டுச் செக்குகளுக்கு அந்த மானியம் தரப்படுமாம்.

உரிமையை வற்புறுத்த உண்ணு நோன்பு!

அமிர்தசரஸ், ஆக. 10—

ஆலை ஊழியர்களுக்குக் குறைந்தது ரூ. 54 மாதச் சம்பளம் தரப்படவேண்டும் என்று 'டிரிபியூனல்' தீர்ப்பளித்துள்ளதாம்; ஆனால், ஒரு பெண் ஊழியருக்கு மாதம் ரூ. 35 மட்டும்தான் தரப்படுகிறதாம்.

'டிரிபியூனல்' அளித்த தீர்ப்பு பெண் ஊழியருக்குப் பொருந்தாது என்று ஆலை முதலாளிகள் கூறிவிட்டனராம். இது மிகவும் 'அநியாயம்' என்று ஆலையில் பணியாற்றும் ஒரு பெண், ஆலை வாயில் முன் உண்ணாவிரதம் மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது.

டில்லியின் யோசனையை கேரளம் ஏற்கவில்லையாம்

புதுடில்லி, ஆக. 9—

அரசாங்கமே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்தும் நோக்கத்துடன் கேரள அரசாங்கம் கல்வி மசோதா ஒன்று கொண்டுவந்துள்ளனரல்லவா?

'இந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் ஆதரிக்கவில்லை' என்று மக்கள் சபையில் உள்நாட்டு அமைச்சர் பந்த் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத்தைப் பற்றி மத்திய அரசாங்கம் சில யோசனைகள் தெரிவித்ததாகவும், கேரளம் அதில் ஒருசிலவற்றை ஒப்புக்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் மக்கள்சபையில் தெரிவித்தார்.

ரஷ்யாவில் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை

புரட்சிக்கு முன்பு ரஷ்யாவில் 10 பல்கலைக் கழகங்கள்தான் இருந்தன; இன்று 36 பல்கலைக் கழகங்கள் உள்ளனவாம்! பல்கலைக் கழக மாணவர்களின் எண்ணிக்கை 36,000-லிருந்து ஏறத்தாழ 2,00,000 ஆக உயர்ந்துள்ளதாம்!

சுதந்திரம் பெறும் மலாயாவில் குடியுரிமை:

சிறுபான்மையோர் பாதிக்கப்படுவரா?

பிரிட்டிஷ் இராணிக்கு மனு அனுப்பிய தமிழர் மீது நடவடிக்கை?

கோலாலம்பூர், ஆக. 10—

சுதந்திர மலாயாவில் குடியுரிமை வழங்குவது பற்றிய ரீட் அரசியல் சட்ட கமிஷனின் அறிக்கைக்கு மலாயா சர்க்கார் செய்துள்ள திருத்தங்கள், மலாய் வாழ் இந்தியர்களை—அவர்கள் ஒரு சிறுபான்மையினர் என்ற வகையில் வெகுவாகப் பாதிக்கும் என்றும், எனவே திருத்தங்களை அங்கீகரிக்கக்கூடாது என்றும், காலனி இலாகா மந்திரி மூலம் பிரிட்டிஷ் இராணிக்கு மலாயா இந்தியர்களில் சிலர் மனு ஒன்று அனுப்பினார்களாம்.

இப்படி அனுப்பப்பட்ட மனுவில் கையெழுத்திட்டதற்காக, சர்க்கார் அலுவல்களிலிருக்கும் சில தமிழர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு மலாயா கூட்டு சர்க்கார், மலாயா இந்திய காங்கிரசிற்கு தாக்கீது அனுப்பியுள்ளதாம்.

'மனுவை அனுப்பிய மலாயா தமிழ்ச் சங்கம்—மலாயா இந்தியக் காங்கிரஸ், மலாயா இந்தியர்களின் பிரதிநிதி என்று கூறிட முடியாது; ஏனெனில், அதன் உறுப்பினர்கள் 8 சதவிகிதம்கூட இல்லை; எனவே அது, மலாயா இந்தியர் அனைவருக்குமாகப் பேசுவதற்கில்லை' என்று கூறியிருக்கிறது.

இந்த மனுவில் கையெழுத்திட்டவர்களின் நடவடிக்கைகள் பற்றி கண்காணிக்க போலீசாரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்!

விலை குறைவதைத் தடுக்க இந்த ஏற்பாடாம்!

டோக்கியோ, ஆக. 8—

உலக விற்பனை இடங்களில் முத்துக்களின் விலை குறையாமல் இருக்க, 4 டன் முத்துக்களைக் கடலில் எறிந்துவிடுவதென ஜப்பானிய முத்து ஏற்றுமதி நிறுவனம் முடிவு செய்துள்ளது; இந்து முத்துக்கள் 'தரக் குறைவானவை' என்று அச்சங்கம் கூறுகிறது.

வண்ண முத்துக்கள்!

முத்துச் சிப்பிக்குள் ஏதோ ஒரு பொருளைச் சிறிதளவு செலுத்தி, சிப்பிகளுக்குத் தனி உணவு அளித்து வளர்ப்பதன் மூலம், இயற்கையாகவே முத்துச் சிப்பிகளில் சிவப்பு, மஞ்சள், பச்சை முதலிய வண்ண முத்துக்கள் செய்வதற்கான முறையை ஜப்பானிய நிபுணர் கண்டுபிடித்துள்ளார் என்று தெரியவருகிறது.

பஸ்களில் தொலைபேசி வானொலி வசதிகள்

பம்பாய், ஆக. 9—

பம்பாய் நகர பஸ்போக்குவரத்தில் வானொலி, தொலைபேசி வசதிகள் அமைப்பது பற்றி ஆராயப்படுகிறதாம். இதற்காக ரூ. 30,000 தேவைப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பஸ் போக்குவரத்தை பம்பாய் நகரசபை நடத்தி வருகிறது.

ரூ. 5 கோடி செலவில்!

இந்தியாவில் கச்சா பிலிம் உற்பத்தி செய்யப்படுமாம்

புதுடில்லி, ஆக. 10—

ரூ. 5 கோடி செலவில் திரைப்பட தயாரிப்புக்குத் தேவையான 'கச்சா பிலிம்' உற்பத்தி செய்யும் திட்டத்தைப்பற்றி கிழக்கு ஜெர்மனியுடன் இந்திய அரசாங்கம் கலந்து பேசிவருவதாக மக்கள் சபையில் உதவி வர்த்தக அமைச்சர் சதீஷ் சந்தர் அறிவித்துள்ளார்.

கட்சிகளுக்கு நன்கொடை

மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, ஆக. 9—

நீதிமன்றத்தின் முன்னனுமதி பெறாமல், எந்த நிறுவனமும் அரசியல் கட்சிகளுக்கு ரூ. 5,000-க்கு அதிகமாக நன்கொடை கொடுக்கக்கூடாது!

'போர் நிலைமை' நேரத்தில் தவிர, மற்ற சமயங்களில் எவரும் தொடர்ந்து இருமுறை மக்கள் தலைவர் பதவியை வகிக்கக் கூடாது!

இந்த இரண்டு மசோதாக்களையும் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் மக்கள் சபைக்கு அனுப்பியுள்ளார் என்று தெரியவருகிறது.

தென்னாட்டிற்குப் பாசன வசதி

இரண்டாவது திட்டத்தில் இல்லை?

புதுடில்லி, ஆக. 10—

தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்கான புதுக்கட்டளை மேட்டூர் கால்வாய் திட்டம், புள்ளம்பாடி கால்வாய் திட்டம், தென் ஆற்காடு-புதுவைக்கான நீர் நிலைத் திட்டம், பரம்பிக்குளம் கடலையாறு திட்டம், ஆகியவைகளுக்கு மொத்தம் ரூ. 35,60,00,000 தேவைப் படுகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டத்தில் ரூ. 3,48,00,000 மட்டுமே செலவிட்டு இந்த திட்டங்கள் மேற்கொள்ளப்படுமாம்.

மூன்றாவது திட்டத்தில்தான் திட்டங்களுக்குத் தேவையான முழுத் தொகையையும் ஒதுக்க எண்ணியுள்ளனர் என்று தெரிய வருகிறது.

முதன் மந்திரியின் கொடும்பாவி!

பள்ளிப் பெண்கள் எரித்தனர்

இராஜஸ்தான் மாணவர்கிளர்ச்சி

பிகானீர், ஆக. 9—

பள்ளிச் சம்பளத்தை இராஜஸ்தான் சர்க்கார் உயர்த்தியதை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பலத்த அடக்குமுறைகளுக்குப் பின்னும் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

நேற்று பல ஆயிரம் மாணவர்கள், 100 பெண்கள் உட்பட இங்கு பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாணவர்களின் ஊர்வலத்திற்கு பெண்கள் தலைமை தாங்கினர். ஊர்வலத்தில் இவர்கள் இராஜஸ்தான் மாநில முதன் மந்திரியான மோகன்லால் சுகாடியாவைப்போல பொம்மை செய்து கொடும்பாவியாக ஊர்வலத்தில் இழுத்துவந்தனர்; பின், ஊர்வலம் முடிந்ததும், அந்தக் 'கொடும்பாவி'க்கு மாணவர்கள் தீ மூட்டினர் என்று தெரியவருகிறது.

முதலமைச்சர் வீட்டின் முன்பு ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, ஆக. 10—

குழந்தைகள், பெண்கள் உள்பட 200 அகதிகள் முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் வீட்டின் முன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உணவு, இருக்க இடம், மற்றும் சில வசதிகள் வேண்டும் என்று கோரிய அவர்கள் நடுரோட்டில் உட்கார்ந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்; போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்தனர்.

‘எங்கள் பிரச்சினைகள் உயிர்ப் பிரச்சினைகளாகும்’

‘பொதுநலத்திற்காக வாழ்வை ஈடு கொடுக்கும் எங்கள் குறைகளைக் கேளீர்’

அமைச்சர் மாணிக்கவேலரிடம் நெய்வேலி தூதுக் குழு முறையீடு

சென்னை மாநில நிலவரி அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலர் அவர்கள் 4-8-57-ல் நெய்வேலிக்கு வருகை தந்தபோது நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் பாதுகாப்புச் சங்கத் தலைவரும், சட்டமன்ற தி. மு. க. உறுப்பினருமான தோழர் எம். செல்வராசு அவர்கள் மூலமாக சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களும் பாதுகாப்புச் சங்க உறுப்பினர்களும் நேரில் கொடுத்த ‘மகசர்’ விவரம் இங்கு தரப்படுகிறது:—

நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கத்தைத் தோற்றுவித்து, தென்னாட்டில் பலவகையான தொழில் துறை வளர்ச்சிக்கு வாய்ப்பு அமைத்து, மக்கள் வாழ்க்கைத் தரம் உயர உருவாக்கும் இந்த ஆக்க வேலையை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

தென்னாட்டில் தோன்றி உருவாகிவரும் இப்பெரிய அமைப்புக்கு நாங்கள் பல தலைமுறையாக வாழ்ந்து அனுபவித்துவரும் உடைமைகளையும், இடங்களையும் கொடுப்பதில் பெருமகிழ்வும், பெருமையும் பெறுகிறோம். இது நமது நாட்டுக்குச் செய்யும் கடமை என்பதையும் உணர்ந்து இருக்கிறோம்.

இம்மாபெரும் பொதுநலப் பணிக்கு எங்கள் வாழ்க்கையையே ஈடுகொடுக்க முன்வந்துள்ள எங்கள் குறைகளை தங்களிடம் மிகவும் தாழ்மையோடு முறையிட்டுக் கொள்ளுகிறோம். எங்கள் பிரச்சினை உயிர்ப் பிரச்சினை!

பல்லாயிரக்கணக்கான மக்கள், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, ஓரிடத்தில் நிலைத்து வழிவழி வாழ்ந்துள்ள இடத்தைவிட்டு, வேறு ஒரு புதிய இடத்தில் குடியேறி, புதியதாக அமைத்துக் கொள்ளும் ‘வாழ்க்கை’ எங்கள் உயிர்ப் பிரச்சினை என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கோரிக்கைகள்

வீடு, கிணறு முதலிய கட்டடங்களுக்குத் தற்கால நிலைப்படி விலை மதிப்பிட்டு, தேய்மானம் கழிவு இல்லாமல் கொடுக்கவேண்டும்;

கிராமநத்தத்தில் அனுபவித்துவரும் பூமி பரப்புக்கு, தற்கால நிலையில் உள்ள உயர்ந்த விலைப்படி மதிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்;

கட்டடம் கட்டாத கிணறுகளுக்கு, ஆழத்தை அளந்து கணக்கிடுவதில் அந்தந்த நிலையில் இருக்கும் மண், கற்பாறை, சுண்ணாம்பு பாறை முதலிய கடினமான பூமிக்குத் தக்கபடி வெட்டுக் கூலியை மதிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்;

பலன்தரும் மரங்களுள்ள தோப்புக்களுக்கும், தனித்த மரங்களுக்கும், குறைந்தது 20 ஆண்டு மகசூல் நஷ்டத்தைச் சேர்த்து மதிப்பிட்டுக் கொடுக்கவேண்டும்;

சாதாரண மரங்களுக்கும், பலன்தர தயாராகும் கன்றுகளுக்கும், 20 ஆண்டு வளர்ச்சி நிலையில் மதிப்பிட்டு சேர்த்துக் கொடுக்க வேண்டும்;

நிலம்:—சர்க்கார் தரம், நில வளம் இவைகளை அனுசரித்து நிலங்களுக்குத் தற்கால உயர்ந்த விலைப்படி மதிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்;

நிலங்களை மதிப்பிடும்போது ‘பிளாக்’ வாரியாக மதிப்பிடும் முறையை மாற்றி, அந்தந்தக் கிராமங்களில் உள்ள தற்கால உயர்ந்த விலையை அடிப்படையாகக் கொண்டே எல்லா நிலங்களுக்கும் மதிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்;

நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் போது, நிலக்கிரயம்; மாசூல் நஷ்டம்; மரம்; கிணறு; வீடு— இவைகளின் கிரயத் தொகையைக் கொடுத்து பட்டுவாடா செய்த பிறகுதான் சர்க்கார் மேற்படி சொத்துக்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நில ஆர்ஜிதம் சம்பந்தமாக சர்க்கார் மக்களிடம் தொடர்புகொள்ளும் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே இருக்கவேண்டும்;

‘அவார்டு விசாரணை’யை, போக்குவரத்து வசதியின்மை, கால விரயம் இவைகளை முன்னிட்டு சம்பந்தப்பட்ட கிராமத்திலேயே வைத்துக்கொள்ளவேண்டும்;

நிலம், வீடு முதலிய எல்லா சொத்துக்களுக்கும், தற்கால விலைப்படி மதிப்பிடும், தொகையுடன் குறைந்தது 50 சதவிகிதமாவது ‘போனஸ்’ சேர்த்துக் கொடுக்கவேண்டும்;

மக்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை நெய்வேலியிலேயே கொடுக்கவேண்டும்;

நில ஆர்ஜித வேலைகளால் கிராமங்களுக்கு, மதுரா கிராமங்களுக்கும் உள்ள பழக்கமான பொதுப் பாதைகள் துண்டிக்கப்படுவதால் போக்குவரத்து வசதிகள் மிகவும் தொல்லை நிறைந்ததாயிருக்கின்றன; மழை நீர் ஓடிக்கொண்டிருக்கும் ஓடைகளையும் தடுத்துவிடுவதால் கிராமங்களில் நீர் தேங்கி குடியிருப்பதற்கும் கஷ்டம் ஏற்படுகிறது; ஆகையால் பழக்கமான பாதைகள் பாதிக்கப்படும் நேரத்தில் வேறு புதிய பாதைகள் உடனே அமைப்பதுடன், மழைத்தண்ணீர் தேங்கி நிற்காமல் ஓட வகை செய்து கொடுக்க வேண்டும்’

சர்க்கார் அதிகாரிகள் மக்களிடம் தொடர்பு கொள்ளும் போது மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும். 12-7-57-ல் இளவரசம்பட்டுக் கிராமத்தில் நிலக்கரி எடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பகுதியில் எடுத்த மண்ணை மகசூல் உள்ள நிலங்களில் போட்டு அழித்துவிட்டார்கள்; வெள்ளையங்குப்பம் பாட்டைப் புறம்போக்கு நீரோடை வண்டிப் பாட்டை பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பாதையிலும் மகசூல் செய்ய தயாரித்துவைத்த நிலத்திலும் பிரவேசித்துவிட்டார்கள்; இதனால் ஒரு நீரோடை தடுக்கப்பட்டு அந்தக் கிராமமே அழியும்படியான நிலையில் உள்ளது;

சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு தகுதிக்குத்தக்கபடி வேலை, சுரங்க அமைப்பில் வேலை, வியாபாரம் செய்யும் உரிமை, இதர கைத்தொழில் செய்து வாழ முதல் சலுகை அளிக்கவேண்டும்;

வெளியேறும் கிராம மக்களுக்கு புதிய கிராமம் அமைப்பதில், கூட்டுறவு முறையில் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் நிதி உதவி அளித்து வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும்:

வீட்டு மனைகள் ஒவ்வொன்றும் 10 செண்டு பரப்புக்குக் குறையாமல் அளிக்கவேண்டும்!

ஒவ்வொருவரிடமும் எடுத்துக் கொள்ளும் நிலத்திற்குச் சமமான அளவுக்குக் குறையாமல் நிலம் கொடுக்க வேண்டுவதுடன், 5 ஏக்கருக்குக் குறையாமல் கொடுக்கவேண்டும்;

புதிய கிராம அமைப்பில் தேவையான குடியிருப்பு விவசாயம், வைத்தியம், குடிதண்ணீர், கல்வி, வெளிச்சம், போக்கு வரவு சாதனம் முதலிய எல்லா நலன்களும் நிறைந்து இருக்க அமைத்துக் கொடுக்கும்படி வேண்டுகிறோம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி

‘ஜெர்மன் நிலக்கரியைப்போன்றே சிறப்பானதாகும்’

நிர்வாக அதிகாரி தரும் தகவல்

சென்னை, ஆக. 8—

“நெய்வேலி நிலக்கரி, ஜெர்மன் நாட்டில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைவிடச் சிறந்ததாக வேண்டுமானால் இல்லை என்று கூறலாம்; ஆனால், ஜெர்மன் நாட்டின் சிறந்த நிலக்கரி எவ்வளது சிறப்பானதோ— அவ்வளவு சிறப்பானது— நெய்வேலி நிலக்கரியும்” என்று, நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனின் நிர்வாகத் தலைவரான டி. எம். எஸ். மணி ஐ. சி. எஸ். கூறியிருக்கிறார்.

இரண்டு மாதங்களுக்கு மேலாக ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள அவர், ‘நெய்வேலி நிலக்கரிச சுரங்கம் வேறு பல நாடுகளிலும் உள்ளது போலவே நவீனகால முறைப்படியே நிறுவப்படுகிறது’ என்றும் தெரிவித்திருக்கிறார்.

புத்த மதத்தில் சேர்ந்த ‘ஷெட்யூல்டு’ வகுப்பார்

சலுகைகள் தரக் கோரிக்கை

சென்னை, ஆக. 9—

சென்னை மாநில ஷெட்யூல்டு வகுப்பார் சம்மேளனப் பொதுச் செயலாளர் திரு. எம். கிருஷ்ணசாமி விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:—

“புத்தநெறியின் சின்னமான அசோகச் சக்கரத்தை தேசியக் கொடியில் பொறிக்க இசைந்த இந்திய சர்க்கார், புத்த மதத்தில் சேர்ந்துள்ள ஷெட்யூல்டு வகுப்பாருக்குச் சலுகைகள் தரமறுப்பது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை.

கிருத்துவ மதத்தில் சேர்ந்த ‘ஷெட்யூல்டு’ வகுப்பாருக்கு மட்டும் சலுகைகள் அளிப்பதாக சென்னை சர்க்கார் அறிவித்திருக்கிறது.

“கிருத்துவ மதத்தில் சேர்ந்த எத்தனையோ ‘ஷெட்யூல்டு’ வகுப்பார், உயர்ந்த சாதியிலிருந்து கிருத்துவ மதத்துக்கு மாறிய குடும்பங்களுடன் கலப்பு மணம் செய்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், கிருத்துவர்களாக மாறிய தாழ்த்தப்பட்ட மக்கள் யார் என்பதை எப்படி நிர்ணயிக்க முடியும்? இன்னும் எத்தனையோ ‘ஷெட்யூல்டு’ வகுப்பார் முஸ்லிம்களாகக்கூட மாறியிருக்கின்றனர். கிருத்துவ மதத்தில் சேர்ந்த ‘ஷெட்யூல்டு’ வகுப்பாருக்கு மட்டும் இந்த ‘ஷெட்யூல்டு’ வகுப்பாருக்குச் சமமாக சலுகைகள் வழங்க முன்வந்தது ஏன்?”

சிக்கன நடவடிக்கைகளாம்

மக்கள்சபையில் நேரு விளக்கம்

புதுடில்லி, ஆக. 9—

டெல்லி சர்க்கார் பல சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனராம்!

“சில திட்டங்கள் ஒத்திவைக்கப் பட்டுள்ளன அல்லது கைவிடப் பட்டிருக்கின்றன; சில பெரிய உத்தியோகங்களுக்கு நபர்கள் நியமிக்கப்படவில்லை; சில பதவிகள் இல்லாமற் செய்யப்பட்டிருக்கின்றன; இவை எல்லாம் அந்த நடவடிக்கைகளில் சில”

என்று பண்டிதர், மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறாராம்.

‘இதுபோன்று சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து சாக்கார் அவ்வப்போது அறிக்கை தரும்’ என்றும் அவர் கூறியிருககிறார்.

தென் ஆப்பிரிக்க சர்க்காரின்

இன்வெறியாட்டம்

ஐ. நா. பொதுச் சபை விவாதிக்க வேண்டுமெனக் கோரிக்கை

நியூயார்க் ஆக. 8—

தென் ஆப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொடுமை குறித்து ஐ. நா. பொதுச் சபை விவாதிக்க வேண்டுமென இந்தியா, எகிப்து மற்றும் ஆறு நாடுகள் கோரியுள்ளன என்று தெரிய வருகிறது.

வரும் செப்டம்பர் 17-ந் தேதி துவங்கவிருக்கும் பொதுச் சபையின் 12-வது கூட்டத் தொடருக்கான நிகழச்சி நிரலில், இந்த விஷயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொதுச் செயலாளருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

உலக நிறுவனம் தொடர்ந்து தனது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறி, ஐ. நா. சபையில் தனக்குள்ள பிரதிநிதித்துவத்தை தென் ஆப்பிரிக்கா; ஒரு அடையாள தூதுக் குழு என்ற அளவுக்குச் சுருக்கிக் கொண்டுள்ளது.

கடந்த ஜனவரித் திங்கள் 30-ந் தேதியன்று, ஐ. நா. பொதுச் சபை, ‘தெ. ஆ. யூனியன் சர்க்கார், ஐ. நா. சாசனப்படி தனக்குள்ள கடமையைச் செய்ய தொடர்ந்து மறுத்து வருவதுடன் எதிர்காலத்தில் இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதில் அதிக கஷ்டங்களை உண்டுபண்ணும் வகையில் நடந்து கொள்ளுவதும் கண்டிக்கத்தக்கதாகும்’ என்று தீர்மானம் ஒன்றின்மூலம் தெரிவித்தது.

இந்தத் தீர்மானம் ஒரு விளக்கக் குறிப்புடன் தென் ஆப்பிரிக்க சர்க்காருக்கு ஐ. நா. பொதுச் செயலாளரால் அனுப்பிவைக்கப் பட்டும் பயனில்லாது போய் விட்டது.

தமிழ் நாட்டில் கடலை சாகுபடி

சென்னை, ஆக. 8—

சென்னை மாநிலத்தில் 1956—57-ம் ஆண்டில் 4,620 ஏக்கரில் கடலை சாகுபடி செய்யப்பட்டது. முந்திய ஆண்டு சாகுபடி 4,370 ஏக்கர்; முந்திய ஐந்து ஆண்டு சராசரி சாகுபடி 4,520 ஏக்கர்.

தஞ்சாவூர், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடலை பயிராகவில்லை. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் முந்திய ஆண்டைவிடக் குறைந்த அளவிலும் இதர மாவட்டங்களில் அதிகமாகவும் பயிராயிற்று.

மொத்த விளைச்சல் 990 டன்; முந்திய ஆண்டில் 950 டன்; முந்திய ஐந்தாண்டு சராசரி விளைச்சல் 880 டன்.

அமெரிக்கா தயாரிக்கும் உணவு மாத்திரைகள்

உணவுகளைப் போன்ற சத்துடையவையும் நீண்டநாள் இருக்கக்கூடியவையுமான உணவு மாத்திரைகளையும், கட்டிகளையும் அமெரிக்காவிலுள்ள உணவு ஆராய்ச்சி நிலையமொன்று தயாரிக்கிறதாம்!

மாமிசம் ஒரு சிறு பிளாஸ்டிக் குழாயிலிருந்து வருகிறது; கடிக்காமல் சாப்பிடுவதற்குத் தகுந்த முறையில் அது கிடைக்கிறது.

பால்கட்டி ஒரு மாத்திரையாகவும், தானியங்கள் கட்டியாகவும் கிடைக்கின்றன.

‘எக்ஸ்பிரஸ்’ கடிதங்கள்

விரைவில் விநியோகிக்கப் புதியதோர் ஏற்பாடு

புதுடில்லி, ஆக. 8—

‘துரித (எக்ஸ்பிரஸ்) கடிதங்கள் பொதுமக்களுக்கு விரைவில் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் அஞ்சல் ஊழியர்களுக்கு மோட்டார் ‘ஸ்கூடர்’ வண்டி வசதிசெய்துத் தரப்படும்’ என்று மத்திய அமைச்சர் சாஸ்திரி மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

ஆயிரத்தில் ஒருவர் அகப்பட்டுவிட்டார்!

புதுடில்லி, ஆக. 9—

வருமான வரி இலாகாவில் பணிபுரிந்து வந்த அதிகாரி ஒருவர், இப்போது டெல்லி சர்க்காரின் ‘பாஸ்போர்ட்’ இலாகாவில் பணியாற்றுகிறாராம் அவர், நடைமுறை விதிகளுக்கு விரோதமாக ‘பாஸ்போர்ட்’டுகளைக் கொடுத்து வந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம்! அவர்மீதுள்ள குற்றச்சாட்டுகளில் இது பிரதானமானதல்லவாம்!

ஆனால் அவர், தனது நியாயமான வருமானத்திற்கும் அப்பாற்பட்டவகையில், பொருள் சம்பாதித்திருக்கிறாராம்! அவர் வைத்து வைத்துள்ள சொத்துக்கள் எப்படிச் சம்பாதிக்கப்பட்டன என்று, அவரால் காரணம் கூற முடியவில்லையாம்!

இந்த விஷயங்களை துப்பறிந்த உள்காட்டிலாகாவின் விசேடப் போலீசார் கண்டுபிடித்தனராம்!

அதன் விளைவாக, அந்த அதிகாரி இப்போது பதவியிலிருந்து தூக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

எத்தனை ஆயிரம் பேர் இப்படிப் பட்டவர்களாயிருக்கிறார்களோ! ஒருவர் அகப்பட்டுவிட்டார்.

கலை, இலக்கியம், இசைத் துறைகளில் அரிய சேவை

விருதுகள் வழங்க சென்னை சர்க்கார் முன்வருகிறது

சென்னை, ஆக. 8—

பழம் பெரும் நாடகாசிரியரான திரு. பி. சம்மந்தம் (முதலியார்) அவர்கள் ஆற்றிய கலைத் தொண்டு; இலக்கியத்திற்காகப் பேராசிரியர் டாக்டர் வரதராசனார் ஆற்றிய சேவை; இசைத் துறையில் திருமதி கே. பி. சுந்தராம்பாள் ஆற்றிய தொண்டு; இவற்றைப் பாராட்டுமுகத்தான் அவர்களுக்கு அரசாங்க விருதுகள் வழங்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சுதந்திரப் போராட்ட விழாவின்போது இராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் காமராசர் தலைமையில் விழா நடத்த ஏற்பாடாகிவருகிறது.

புதிய ரூ. 10 நோட்டுகள் வெளிவருமாம்

பம்பாய், ஆக. 8—

தற்போது ரிசர்வ் பாங்கின் கவர்னராக உள்ள எச். வி. ஆர். அய்யங்காரின் கையெழுத்துடன் கூடிய புதிய ரூ. 10 நோட்டுகள் விரைவில் வெளிவரும் என்று தெரியவருகிறது.

இதைத்தவிர, வேறு எந்த மாற்றமும் இந்நோட்டுகளில் இராது. பழைய நோட்டுகளும் செல்லுபடியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பழவேற்காட்டில் அப்ரகம் ?

பழவேற்காடு, ஆக. 8—

பொன்னேரி தாலுக்கா பழவேற்காடு கிராமத்தில் அப்ரகம் கிடைத்திருப்பதாகவும், அதன் மாதிரிப் பொருள் தாசில்தாருக்கும், நிலவள ஆராய்ச்சி நிலையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

இவ்வூருக்கு ஒரு மைல் தூரத்தில் பாலம்கட்ட அஸ்திவா[illegible] தோண்டப்பட்டபோது அப்[illegible] போன்ற பொருள் கிடை[illegible] தாகக் கூறப்படுகிறது.

திருடு போவதைத் தடு[illegible] அதிகாரி நியமனமா[illegible]

புதுடில்லி, ஆக. [illegible]

அஞ்சல் தொலைவரி இலா[illegible] வில் செப்புக் கம்பிகள் திரு[illegible] போவதைத் தடுத்துப் பாதுகாக்க ஒவ்வொரு மாநிலத்திலும் உயர்தரப் போலீஸ் அதிகாரி நியமிக்கப்படுவார்கள் என்று மக்கள் சபையில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாபில் இந்தி வெறியர் ஆர்ப்பாட்டம்

சர்க்கார் குழு பேச்சுவார்த்தை நடத்துமாம்

சந்திகார், ஆக. 11—

பஞ்சாபில் ஆரிய சமாஜிகள், மற்றும் சில மத வெறியர்கள், இந்தி வெறிகொண்டு அலைகின்றனர்; அவர்களின் ஆர்ப்பாட்டங்களுக்கும், வரம்பு மீறிய சேஷ்டைகளுக்கும் பஞ்சாப் சர்க்கார் பணிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அவர்கள் இந்திக்கு ஆதிக்கம் கோரி கடந்த சில வாரங்களாக நடத்திவரும் கிளர்ச்சிபற்றி அனைவரும் அறிவர்.

இந்த நிலையில், அவர்கள் கவர்னரைச் சந்தித்து தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்தனராம். அவர்கள், ஒரு கமிட்டியை நியமிக்குமாறு அவர்களுக்குக் கூறியிருக்கிறார். அந்த இந்தி ரக்ஷக கமிட்டியினருடன் பஞ்சாப் சர்க்காரின் குழு ஒன்றும் கூடிப் பேசுமாம்!

பஞ்சாப் சர்க்கார், ஒரு ஐந்து பேர்கொண்ட குழுவை கவர்னரின் யோசனையின்பேரில் நியமித்திருக்கிறார்களாம்!

இவர்கள், பஞ்சாபில் மொழிப் பிரச்சினைக் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவாராம்.

இலங்கை தமிழர் பெறும் உரிமைகள்

சேனநாயகா மனக்கொதிப்பு

கொழும்பு, ஆக. 11—

"இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, தமிழரசுக் கட்சியினருடன் செய்துகொண்ட ஒப்பந்தம், நம்பிக்கைத் துரோகமானதாம்!

இப்படி இலங்கையின் முன்னாள் பிரதமரான டட்லி சேனநாயகா, தமது ஐக்கிய தேசிய கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

"இலங்கையை இனவாரியாகப் பிரிக்கும் ஒரு சதிதான் இந்த ஒப்பந்தம்"

என்றும் அவர் ஓலமிட்டிருக்கிறார்.

"ஐக்கிய தேசியக் கட்சி இருக்கும்வரையில், இந்த ஒப்பந்தம் அமுலாக விடமாட்டோம்"

என்றும் அவர் கொக்கரித்திருக்கிறார்!

அதிகாரங்களைப் பரவலாக்குவது என்ற நோக்குடன், வட்டாரக் கவுன்சில்கள் அமைப்பது என்ற ஒப்பந்தத்தின் சிறப்பான அம்சத்தை அவர் வன்மையாகக் கண்டித்தாராம்!

மேலும், தமிழுக்கு சிறுபான்மையினரின் தேசிய மொழி என்ற அந்தஸ்து தருவதையும் அவர் எதிர்த்திருக்கிறார்.

அல்ஜீரிய விடுதலைக்குக் காணிக்கை

35,000 வீரர்கள் பலியாகியுள்ளனர்

அல்ஜீரியா, ஆக. 11—

அல்ஜீரிய மக்கள், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெறுவதற்காக இதுவரை சுமார் 35,000 வீரப் புதல்வர்களை பலி கொடுத்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி, சுமார் 20,000 பேர் சிறைப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 33 மாதங்களாக, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அல்ஜீரிய தேசியவாதிகள் போராட்டம் நடத்திவருவது தெரிந்ததே!

இந்தக் கிளர்ச்சியை அடக்கச் சென்றுள்ள பிரெஞ்சு இராணுவத்தினரில் 3,900 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 9,000 பேர் காயம்பட்டனர் என்றும், 700 பேரைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

கேரள அமைச்சர்களைக் காமராசர் சந்திப்பார்!

திருவில்லிபுத்தூர், ஆக. 10—

மாநில முதல்வர் காமராசர், கேரள மந்திரிகளை அடுத்த திங்கள் முதல் கிழமையில் திருவனந்தபுரத்தில் சந்திப்பார்.

அவர்களிடம், மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் நதிகளின் தண்ணீர் அரபிக் கடலில் விழுந்து வீணாவதைத் தடுத்து, அந்த நீர் பயன்படும்படி செய்வது குறித்து விவாதிப்பார்.

இந்தத் தகவலை அவரே இங்கு தெரிவித்தார்.

அவரிடம், மேற்கு மலைநீர் தமிழ் நாட்டிற்கு உபயோகமாகும்படி செய்ய வேண்டுமென வட்டார மக்கள் முறையிட்டபோது அவர் இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

'வீணாகும் மேற்குத் தொடர்ச்சி மலை நதிகளின் தண்ணீர் தமிழ் நாட்டிற்குத் திருப்பப்பட்டால், வட்டாரத்தில் மட்டும் புதிதாக 20 ஆயிரம் ஏகர் நிலம் பாசன வசதிபெறும்' என்று, முதல்வரிடம் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளக் கொடுமை

10,000 பேர் பலியாயினர்?

மீட்சி வேலையில் ஈடுபட்ட 10,000 பேர் கதி என்ன?

டோக்யோ, ஆக. 12—

ஆபத்தில் சிக்கியவர்களை மீட்கச் சென்ற 10,000 பேர்கள் ஆபத்தால் சூழப்பட்டு, அவதிப்படுவதாகச் செய்தியொன்று தரப்பட்டிருக்கிறது.

மத்திய ஜப்பானில் குன்மா பகுதியில் வெள்ளத்தில் சிக்கி அவதிக்குள்ளானவர்களை மீட்கச் சென்றவர்களுக்கே இக்கதி ஏற்பட்டுள்ளதாம்; அங்கு இடி, மின்னல், சூறாவளியால் 200 பேர் வரை மாண்டிருப்பதாகத் தெரிகிறது.

வெள்ளத்தின் விளைவாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, பாதைகள் துண்டிக்கப்பட்டதனால், மீட்சித் தொண்டர்கள் 10,000 பேரும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். இவர்கள் இதுவரை பல சவங்களை மீட்டிருக்கின்றனர்.

கியூசு தீவில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையால் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இறந்தும், காயம்பட்டும், காணமற்போயிமிருப்பதாகச் செய்தி வெளியானது நினைவிலிருக்கலாம்.

இரா. நெடுஞ்செழியன் அன்பழைப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபையிலே பேச்சைக் கேட்கின்றனர்.

"'நிரந்து இனிது சொல்லவல்லான் பெறின், விரைந்து உலகம் ஓடிவரும்' என்று வள்ளுவர் கூறியதற்கிணங்க, நாங்கள் பேராற்றலைப் படைத்திருக்கிறோம்; எங்கள் பேச்சைக் கேட்க உலகமே விரைந்து வருகிறது. எனவேதான், எங்களால் சட்டமன்றத்திலே தொகுதியில் உள்ள குறைபாடுகளையெல்லாம் எடுத்துரைக்கமுடிகிறது.

"விராதி வீரர்களான சேரர்—சோழர்—பாண்டியர்கள் வாழ்ந்த நாடு இது. ஆற்றல் மறவர்கள் வாழ்ந்த நாடு. இலங்கையையும், கடாரத்தையும் வென்று ஆண்டார்கள் இராஜராஜ சோழனும் இராஜேந்திர சோழனும்!

"கங்கையையும் கடந்து வெற்றி கண்ட சோழனின் பெயரால் 'கங்கைகொண்டான்' என்னும் ஊர் இன்றும் வழங்குகிறது. 'ஜெயங்கொண்ட சோழபுரம்' என்ற ஊரும் சோழநாட்டிலே இருக்கிறது. கடாரம் வென்ற சோழனின் நினைவாக 'கடாரங்கொண்டான்' என்னும் ஊரும் இருக்கிறது. இந்த ஊர்களுக்கு 30 மைல் தொலைவில்தான் 'டால்மியாபுரமும்' இருக்கிறது.

"வெற்றி வேந்தர்கள் வாழ்ந்த இடத்தில்தான் இன்று இராமகிருஷ்ண டால்மியா வாழ்கிறான்! ஆற்றல் மறவர்களான தமிழ்ப் பெருங்குடி மக்கள், இன்று இலங்கை தேயிலைத் தோட்டத்திலும், பர்மா, மலேயா இரப்பர் காடுகளிலேயும் முறிச்சீட்டு எழுதிக் கொடுத்து அடிமைகளாகக் கூலிவேலை செய்து பிழைக்கிறார்கள்.

"மண்வெட்டியும் கூடையும் ஏந்தி, குழிவிழுந்த கன்னங்களுடன்—ஒளி இழந்த கண்களுடன்—உலர்ந்த உதடுகளுடன், தேயிலைத் தோட்டங்களிலே — அட்டைகளும் பாம்புகளும் நெளியும் காடுகளிலே வேலைசெய்து பிழைக்கிறார்கள். பீஜித் தீவிலும், தென் ஆப்பிரிக்காவிலும் இதே நிலையில் தமிழர்கள்!

"இங்கோ, டால்மியாபுரத்திலே இராமகிருஷ்ண டால்மியா வாழ்கிறார். டால்மியாபுரம் போதாதென்று சேலத்திலும் ஒரு சிமெண்டுத் தொழிற்சாலை நிறுவ டால்மியாவுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

"கொத்தவால்சாவடி என்பது தமிழர்களின் பேட்டை. அந்தப் பேட்டை கடந்த 20 ஆண்டுக்குள் 'சவுக்கார் பேட்டை'யாக மாறிவிட்டதே!

"இங்கு இரும்பு வேண்டுமானால் டாட்டா! பவுனுக்கு பாபா லால்; துணிக்கு செல்லாராம்; காப்பிக்கு ஆரிய பவன்; கப்பலுக்கு லால்சந்த் ஹீராசந்த்; பத்திரிகைக்கு கோயங்கா; சிமெண்டுக்கு டால்மியா!

"இந்த நாட்டுப் பரம்பரை வெளிநாடுகளிலே கூலிகளாக வாழுகிறார்கள்; வடநாட்டுக்காரன் இங்கு வந்து கொழுக்கிறான்.

"பஞ்சாபியும் வங்காளியும் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்; ஆனால் கூலிகளாக அல்ல—போர் வீரனாக! மார்வாடியும் செல்கிறான்—வட்டிக் கடைக்காரனாக!

"இந்த நாட்டில் நாம் வாங்கும் குண்டூசி, கொண்டை ஊசி, ரிப்பன் முதல் பிளேடுவரை எல்லாம் வடநாட்டுச் சரக்குகள்! முன்பு அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளிலிருந்து குவிந்துவந்த சாமான்கள் எல்லாம் இன்று வடநாட்டிலிருந்து இங்குவருகிறது!

"பொருளாதாரக் கணக்குப் போட்டு, வடநாட்டோடு தென்னாடு இணைந்திருப்பதால் இன்னவகையிலே இலாபம் என்று கூறியிருக்கிறார்களா எவராயினும்?

"அறிவு, ஆற்றல், கலை, நாகரீகம் பண்பாடு இவற்றையாவது வடநாட்டிலிருந்து நாம் பெறுகிறோம் என்று சொன்னாலும் நமக்குத் தனி நாடு பிரிய வேண்டாம். அதுவாவது உண்டா? எதிலே நம்மைவிட வடநாட்டினர் சிறந்தவர்?

"கோயில்களைத்தான் எடுத்துக்கொள்வோம்—நம் நாட்டிலுள்ள மதுரை சிதம்பரம் கோயில்களைக்கூட விட்டுவிடுவோம்; இங்குள்ள சாதாரண உண்டைக் கட்டி பிள்ளையார் கோவில் அளவுக்காவது வடநாட்டில் சிறப்பக் கலை திகழும் கோயில்கள் உண்டா? காசி விசுவநாதர் கோயிலிலே என்ன அழகுக் கலையை ரசிக்கமுடியும்?

"வடநாட்டு இசையைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன்—இன்று இந்தி மெட்டுகள் என்பவைகூட 'ஒரிஜனல்' இந்தி மெட்டுகள் அல்ல; மேல் நாட்டு சங்கீதத்தைத் தழுவியவை. தமிழ் நாட்டு கர்னாடக சங்கீதம் எங்கே—இந்தி மெட்டுகள் எங்கே?

"சுத்தத்தைதான் எடுத்துக்கொள்வோம்—மலையாளி ஒரு நாளைக்கு இரண்டு தடவை குளிக்கிறான்; தமிழன் ஒரு முறையாவது குளிக்காமல் இருக்கமாட்டான்; ஆந்திரன் இரண்டு நாளைக்கு ஒரு முறையாவது குளிப்பான். வடக்கே உள்ளவர்கள் ஆறு மாதத்துக்கு ஒரு முறைகூட குளிப்பதில்லையே!

"சுவையிலாவது நம்மைவிட அவர்கள் சிறந்தவர்களா? வெண்ணெயும் சர்க்கரையும் இல்லையானால் அவர்கள் தின்னும் சப்பாத்தியில் என்ன சுவையிருக்கிறது? நாம் அறுசுவையுடன் உண்கிறோம். நம் உணவு முறைகளிலுள்ள ஒழுங்கு, சுவை அவர்களுக்கு உண்டா?

"எனவே, சில இலட்சம் பேர்களைக் கொண்ட லக்சம்பர்க்கும், லெபனானும் தனித்து வாழும்போது 9 கோடிபேரைக்கொண்ட திராவிடம் ஏன் தனித்து வாழக்கூடாது? உலகம் எல்லாம் ஒன்றுபடும்போது நாமும் ஒன்றுபடுவோம். அதுவரை நம் பண்பாடு, மொழி, நாடு இவற்றைக் காப்பதற்காக தனித்து வாழ்வோம். ஐரோப்பா 32 நாடுகளாகத் தனித்து இல்லையா?

"எட்டு மாதங்களுக்கு முன்னால் தேபர் சொன்னார்—'இப்பொழுது ஜெய்ஹிந்த் என்ற கோஷமே மறந்துவிட்டது'—என்று! 'ஜெய்ஹிந்த்' என்பது நேத்தாஜி சுபாஷ்சந்திரபோசால் கொடுக்கப்பட்டது; அதற்கு முன்னால் 'வந்தேமாதரம்—அல்லாகு அக்பர்' என்ற கோஷம் இருந்ததே, அது என்ன ஆயிற்று? 'ஜெய் குஜராத்'—'ஜெய் மராட்டி'—'ஜெய் வங்காளி'—என்னும் கோஷங்கள்தாம் தேபரின் காதுகளைத் துளைக்கின்றனவாம்.

"நேரு காலம் வரைதான் 'ஏக' இந்தியா'வுக்கு மதிப்புக் கிடைக்கும்; அதன்பிறகு? நேருவின் சொந்தச் செல்வாக்கும், அறிவாற்றலும்தான் இன்று எல்லோரையும் இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

"நேரு நீண்டகாலம் வாழட்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்; ஆனால் நேருவுக்குப் பிறகு என்ன ஆகும்? தேபருக்கும், பந்துக்கும், முன்ஷிக்கும், மொரார்ஜி தேசாய்க்கும் மதிப்பா கொடுப்பார்கள் மக்கள்?

"எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூய்மையான கொள்கைகளை எண்ணிப் பார்த்து, நம் நாடு நமக்கு ஆக, நல்வாழ்வு பெற நீங்களனைவரும் ஆதரவு நல்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

கழகக் கூட்டம்

★

சென்னிமலை:
குடியரசுப் பூங்காவில்
14—8—57 மாலை 7 மணிக்கு
பேசுபவர்:
நாஞ்சில் கி. மனோகரன்

அச்சுறுத்தலா?

திருவனந்தபுரம், ஆக. 10—

சென்னை மருத்துவக் கல்லூரியில் மலபார் மாவட்டத்தைச் சேர்ந்த 27 மாணவர்களை சேர்க்க சென்னை அரசாங்கம் மறுப்பதைப் பற்றி மத்திய ஆட்சியிடம் புகார் செய்யப் போவதாக கேரள சுகாதார அமைச்சர் டாக்டர் ஏ. ஆர். மேனன் நிருபர்களிடம் கூறியதாகச் செய்தியொன்று தரப்பட்டிருக்கிறது.

சென்னை அரசாங்கத்தின் நடவடிக்கையால் இரு மாநிலங்களின் உறவும் குறிப்பாக ஆற்றுநீர்ப் பிரச்சினையும் பாதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டாராம்!

பி. சோ., சோஷலிஸ்டு கட்சிகள் இணைப்பு முயற்சி

நாராயணன்—லோகியா சந்திப்பின் விளைவு

பாட்னா, ஆக. 11—

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியும்-சோஷலிஸ்டு கட்சியும் இணைவது பற்றி பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு, வரும் ஆக. 31, செப்டம்பர் 1-ந் தேதிகளில் கூடி முடிவு செய்யும் என்று தெரியவருகிறது.

லோகியாவின் கருத்து

'நாட்டில் உள்ள சோஷலிச சக்திகள் அனைத்தும் ஒன்றுசேரவேண்டியது மிக அவசியமாகும்' என்று லோஹியா கருத்தறிவித்திருக்கிறார்.

நிபந்தனைகள்

பி. சோ.-வும் சோஷலிஸ்டு கட்சியும் இணைவதற்கு சம்மதம் தெரிவித்த லோகியா, ஜெயப்பிரகாஷ்நாராயணனிடம் தனது நிபந்தனைகளையும் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, கட்சியின் கொடியும் சின்னமும் பி. சோ. கட்சியினுடையதாகவே இருக்கலாம் என்றும், ஆனால், கட்சியின் பெயர் மட்டும் சோஷலிஸ்டு கட்சி என்றே இருக்கவேண்டும் என்றும் லோகியா தெரிவித்திருக்கிறாராம்

நாராயணன் கருத்து

லோகியாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பூதானத் தலைவர் ஜெயப் பிரகாஷ்நாராயணன், பி. சோ. கட்சித் தலைவர்களிடம் பேச்சுவார்த்தைகள்பற்றியும், இரு கட்சி இணைப்புக் குறித்தும் விளக்கியிருக்கிறார்.

அவர், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக சோஷலிஸ்டுகள் இணைந்து நிற்கவேண்டியது அவசியம் என்றும், இந்த இரு கட்சிகளும் இணைவது திண்ணம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.